# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.114/ந/2026, நாள் 18.09.2026**

டாக்டர் எல்ஜு எல்தோ தாமஸ்
கூடலூர், நீலகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கூடலூர் நகராட்சி, நீலகிரி மாவட்டம். – எதிர்மனுதாரர்.

நீலகிரி மாவட்டம், கூடலூர், மார்த்தோமா நகர் அஞ்சல், புதூர்வயல் ரோடு, எண். 12/216 என்கிற முகவரியில் உள்ள கூடலூர் அரசு ஒப்பந்ததாரர்கள் அசோசியேஷன் தலைவர் டாக்டர் எல்ஜு எல்தோ தாமஸ் என்பவரது 20.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.04.2026 அன்று பெறப்பட்டு 114/ந/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நீலகிரி மாவட்டம், கூடலூர், மார்த்தோமா நகர் அஞ்சல், புதூர்வயல் ரோடு, எண். 12/216 என்கிற முகவரியில் உள்ள கூடலூர் அரசு ஒப்பந்ததாரர்கள் அசோசியேஷன் தலைவர் டாக்டர் எல்ஜு எல்தோ தாமஸ் என்பவரின் 20.04.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"I submit this complaint on behalf of the Gudalur Government Contractors Association, in my capacity as its President. This representation is in continuation of multiple complaints already placed before the competent authorities against Mr. Thiyagarajan, Municipal Engineer, Gudalur Municipality.

It is submitted with concern that despite repeated representations, no effective remedial action has been initiated so far. The practices complained of continue to persist, giving rise to serious issues of maladministration, lack of transparency, and possible misuse of public funds. It is further submitted that these irregularities largely originated during the tenure of the then Commissioner Thiru D. Sakthivel and are continuing thereafter without correction.

Nature of Grievances

1. Improper Invocation of Emergency Provisions

It is observed that the Municipal Engineer is repeatedly invoking emergency provisions under the Tamil Nadu District Municipalities Act, 1920 in a manner not contemplated by law, including:

- Treating routine works as emergency works without justifiable urgency
- Bypassing established tender procedures and transparency requirements
- Allotting works in a selective manner to certain contractors.
- Failing to issue notice or intimation to the Contractors Association.

Such conduct appears to defeat the intent of statutory provisions and raises reasonable apprehension of misuse of official position.

2. Irregularities in Recording and Execution of Works

It is further brought to notice that works undertaken under the above provisions are being recorded at the discretion of the Municipal Engineer, leading to serious doubts regarding:

- Actual execution of the works
- Reliability of measurement records
- Validity of approvals and billing process

In this regard, an independent verification and audit of such works carried out over the past six months is warranted.

3. Selective and Non-Uniform Test Checking

The practice of conducting test checks of the completed works only in respect of selected contractors, while excluding others, is arbitrary and contrary to:

- Principles of equality and natural justice
- Accepted engineering and administrative procedures
- Norms governing transparency in public works

Test checking is required to be undertaken in a fair and uniform manner based on objective criteria such as completion and seniority.

4. Non- Redressal of Earlier Complaints

It is submitted that several oral and written complaints have already been addressed to the Municipal Commissioner and other higher authorities. However, no corrective or disciplinary measures have been taken, resulting in continuation of the above irregularities.

Legal Implications

- The above actions, prima facie, amount to violations of:
- Tamil Nadu Transparency in Tenders Act, 1998
- Tamil Nadu Government Servants Conduct Rules, 1973
- Prevention of Corruption Act, 1988

These issues fall within the scope of maladministration and abuse of authority, warranting consideration by the Hon'ble Ombudsman.

Relief Sought

In the above circumstances, it is humbly requested that the Hon'ble Ombudsman may be pleased to:

1) Take cognizance of this complaint and order an appropriate inquiry in to the actions of the Municipal Engineer.
2) Direct a special audit and technical inspection of all works executed under Section 57 during the past six months.
3) Issue suitable directions to ensure that emergency provisions are exercised strictly in accordance with law.
4) Afford an opportunity to the Contractors Association to present relevant materials and evidence.
5) Recommend suitable disciplinary and legal action against the concerned officials, if warranted.

The continued absence of corrective action has adversely affected confidence in the functioning of the local body administration and undermined transparency in public works. It is therefore, prayed that appropriate intervention may kindly be made in the interest of justice and good governance.".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 30.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கூடலூர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3) கூடலூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 885/2026/இ1, நாள் 13.05.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் முறையீட்டு மனுவில், கூடலூர் நகராட்சி ஆணையர் திரு. சக்திவேல் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு. எம். தியாகராஜன் அவர்களின் பதவி காலத்தில் திட்ட பணிகள் செயல்படுத்தியதில் நடைபெற்ற புகார் தொடர்பாக டாக்டர் எல்ஜு எல்தோ தாமஸ் அவர்கள் அளித்துள்ள புகாரின் மீது வாதத்தினை எழுத்துபூர்வ அறிக்கையாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில், கீழ்கண்டவாறு விளக்கம் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள உரிய விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிகளை மேற்கொள்ள, கீழ்கண்ட இவ்வலுவலக அறிவிப்பு கடிதங்களின் வாயிலாக மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு முறையாகவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

1. கூடலூர் நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 3102/2025/இ1, நாள் 05.01.2026.
2. கூடலூர் நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 276/2026/இ1, நாள் 09.02.2026.
3. கூடலூர் நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண்.1758/2025/இ1, நாள் 05.01.2026.
4. கூடலூர் நகராட்சி அறிவிப்பு கடிதம் ந.க.எண். 181/2026/இ1, நாள் 02.02.2026.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளின் அடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் சான்றிதழின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதியப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கே பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதில் விதிமீறல்கள் ஏதும் ஏற்படவில்லை. மேலும், பணிகளுக்கான அறிவிப்புகளும் தமிழ் நாளிதழ்களிலும் உரிய முறையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாக பொதுமக்களின் நலன் கருதி மூன்று பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு (திருத்தம்) சட்டம், 2022 பிரிவு 57 (7)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகளை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற காரணத்தினால், பணியின் அவசியம் கருதி அலுவலக விளம்பர பலகையில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதன் அடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களுக்கே பணி உத்திரவுகள் வழங்கப்பட்டது. எனவே, இப்பணிகளிலும் விதி மீறல்கள் ஏதும் ஏற்படவில்லை.

3. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசு மானிய நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான மூன்றாம் நபர் கள ஆய்வு அறிக்கை (Third Party Inspection Report) சான்றிதழினை பெற காலம் தாழ்த்துவதாகவும், இதன் காரணமாக பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தொகையினை விடுவிக்க இயலாத காரணத்தினால், அவர்கள் மிகவும் சிரமத்திற்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வரும் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகிய இருவருக்கும் சட்டமன்ற தேர்தல் 2026 பணிகளுக்காக பறக்கும்படை பணியில் அமர்த்தப்பட்ட காரணத்தினால், இருவரும் மேற்படி பணிகளில் முழு கவனம் செலுத்தியதின் காரணத்தினால், இவ்வலுவலக பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாத நிலை ஏற்பட்டது. தற்சமயம், தேர்தல் முடிவுற்றுள்ள நிலையில், மேற்படி சான்றிதழினை பெறும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. சான்றிதழ் கிடைக்கப்பெற்ற உடன் ஒப்பந்ததாரர்களுக்கு உடனடியாக தொகை விடுவிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் அனைத்தும் பொதுப்படையானவை என்ற காரணத்தினால், புகாரின் மீது நடவடிக்கை மேற்கொள்ள அவசியம் எழவில்லை என இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.".

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 16.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தனது 16.06.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில், தனது தனிப்பட்ட காரணங்களால் 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி மனுவில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

I respectfully submit this clarification in connection with the hearing scheduled today. Due to unavoidable personal reasons, I am unable to appear before the Hon'ble Ombudsman in person. I therefore, request that this written submission may kindly be taken on record and considered along with my original complaint.

At the outset, I wish to place on record my sincere appreciation to the Hon'ble Ombudsman for taking cognizance of the issues raised by the Gudalur Government Contractors Association. The very initiation of proceedings has resulted in certain positive chances within the municipality. However, several core issues still remain unresolved and require further examination.

1. Emergency Works Continue to be Awarded without Full Transparency.

One of the principal grievances raised in my complaint was the arbitrary allotment of emergency works under Section 57 without adequate transparency and without informing the registered contractors.

Following the filing of the complaint, there has been some improvement and certain emergency works are now being made known to contractors. However, it is reliably understood that even now some emergency works continue to be allotted to selected contractors without any prior notice, public information or knowledge of all contractors.

The concern of the Contractors Association is not merely with individual works but with the system itself. Unless the clear and transparent procedures are established and followed consistently, there remains a genuine apprehension that the municipality may revert to the earlier practice of selectively awarding emergency works. Such a situation defeats the principles of fairness, transparency, and equal opportunity expected in public administration.

2. Lack of Transparency in Measurement, Test Checking and Bill Processing.

The Major issue faced by contractors is not only the allotment of works, but also the manner in which completed works are processed for payment.

At present, there is no transparent system to determine the order in which measurements are recorded, test checks are conducted, and bills are processed. This creates uncertainty among contractors and gives rise to allegations of favouritism.

To address this issue, the Contractors Association suggested a simple and practical solution to the new Commissioner and the Engineering Department. We requested that a register be maintained in the Engineering Section showing:

- Date of completion of each work;
- Date of submission for measurement;
- Date of test check;
- Status of bill processing; and
- Seniority position of the work.

Such a register would be open for verification by contractors and would ensure transparency in processing completed works.

If measurements, test checks and bills are processed strictly according to seniority, many of the grievances raised before the Hon'ble Ombudsman would automatically stand resolved. More importantly, such a system would prevent the possibility of preferential treatment, arbitrary prioritization of bills, and allegations of undue monetary considerations.

3. Failure to Consider Reasonable Corrective Measures.

Despite repeated representations and constructive suggestions from the Contractors Association, the Engineering Department has not shown willingness to implement the above transparency measures or propose any alternative mechanism.

The refusal to adopt even basic transparency safeguards has strengthened the apprehension among contractors that the previous practices may still be continuing in one form or another. In the absence of objective and verifiable procedures, doubts naturally arise regarding the manner in which emergency works are allotted and bills are prioritised.

While I leave the determination of facts entirely to the wisdom of the Hon'ble Ombudsman, I respectfully, submit that these circumstances justify a thorough and independent examination of the functioning of Engineering Department and the procedures followed in relation to emergency works, measurement, test checking and bill processing.

4. Request for Detailed Investigation.

In view of the above circumstances, I humbly request the Hon'ble Ombudsman to continue the enquiry and direct a detailed examination of:

- The allotment of emergency works under Section 57;
- The procedure followed for measurements and test checks;
- The manner in which contractors bills are prioritized and processed;
- The existence of any arbitrary or discriminatory practices;
- Any instances of maladministration, abuse of authority, or financial irregularities.

The Hon'ble Ombudsman has been entrusted with ensuring accountability, transparency and good governance in local bodies. I therefore respectfully pray that the allegations raised in my complaint may be thoroughly investigated and that suitable directions may be issued to ensure a transparent, fair and accountable system in Gudalur Municipality.

I once again express my inability to attend today's hearing and respectfully request that this clarification may kindly be treated as part of my submissions in the matter.".

6. எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி ஆணையர் திரு. ரவிசங்கர் என்பவர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

கூடலூர் நகராட்சி பணிகள் அறிவிப்பு கடிதங்கள் வாயிலாகவும், மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடைமுறைகள் அனைத்தும் இணையதள வழியாக (Online மூலம்) செயல்பட்டதால், அவை அனைத்தும் வெளிப்படைத்தன்மையாகத்தான் உள்ளது. நகராட்சியில் நடைபெறும் அனைத்து பணிகள் தொடர்பான அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் இணையதள வழியாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கும் முறை இந்நகராட்சியில் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு பட்டியல் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் சான்றிதழின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்களுக்கே பணி வழங்கப்பட்டுள்ளது.

பணிகள் அனைத்தும் சரிபார்த்து பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் பட்டியல்கள் முறையாக தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாக பொதுமக்களின் நலன் கருதி மூன்று பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு (திருத்தம்) சட்டம், 2022 பிரிவு 57(7)ன் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம், 1998, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 இவை அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டு வருகிறது. இதில் விதி மீறல்கள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்னிலையில் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.”.

7. மனுதாரரின் புகார் மனு, மின்னஞ்சல் கடிதம், எதிர்மனுதாரரான கூடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920–ன் கீழ் உள்ள அவசரக்கால விதிமுறைகளை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும், வழக்கமான பணிகளை அவசரக்காலப் பணிகளாகக் கொண்டு குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களில் சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து பணிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும், இச்செயல் அதிகாரப் பதவியைத் தவறாகப் பயன்படுத்தும் தன்னிச்சையான செயலாக உள்ளது என்பதும், ஒப்பந்தப்புள்ளி (Tender) நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மையின்றி, விதிமுறைகளைப் பின்பற்றப்படாதது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்பதும், பணிகளை நிறைவு செய்த ஒப்பந்ததாரர்களில் சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து அவர்களின் பணிகளை மட்டும் பரிசோதனை சரிபார்ப்புக்கு உட்படுத்தி, மற்றவர்களின் பணிகள் தவிர்க்கப்படுகிறது என்பதும், ஒப்பந்தப் பணிகள் பதிவு செய்தல், செயல்படுத்துதல் மற்றும் சீரற்ற முறையிலான பரிசோதனைகள் போன்றவை நகராட்சிப் பொறியாளரின் விருப்பத்தின்படியே நடைபெற்றுவுள்ளதால், கடந்த ஆறு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து சரிபார்ப்பு மற்றும் தணிக்கை செய்ய வேண்டும் என்பதும், அவசரகால பணிகளுக்கான வழிமுறைகள் சட்டத்திற்கு உட்பட்டு பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதும், ஒப்பந்ததாரர்கள் சங்கத்திற்கு ஒப்பந்தப் பணிகள் தொடர்பான அறிவிப்பு அல்லது தகவல் வழங்குவதில்லை என்பதும், ஒப்பந்ததாரர்கள் சங்கம் பலமுறை வழங்கிய ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் பின்பற்றப்படாததால், அவசரகால பணிகள் ஒதுக்கும் விதம் மற்றும் பில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் விதம் சந்தேகிக்கும் வகையில் உள்ளது என்பதும், பொறியியல் பிரிவில் (1) Date of completion of each work (2) Date of submission for measurement (3) Date of Test check (4) Status of bill processing and (5) Seniority position of the

work ஆகிய விவரங்களைக் கொண்ட பதிவேட்டைப் பராமரிக்க வேண்டும் என்பதும், மேற்படி பதிவேடு ஒப்பந்ததாரர்கள் சரிபார்க்கும் வகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என்பதும், முறைமன்றத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோடு, அவசரக்காலப் பணிகள் ஒப்பந்ததாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது என்பதும், அளிக்கப்பட்ட புகார்களுக்கு எவ்வித நடவடிக்கையும் நகராட்சி மேற்கொள்ளாததால், புகார் மனுமீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்ட கடிதத்தில் இருந்து அறியவருகிறது.

கூடலூர் நகராட்சி மூலம் மேற்கொள்ளும் பணிகள் அறிவிப்பு கடிதங்கள் வாயிலாக, மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடைமுறைகள் அனைத்தும் இணையதள வழியாக (Online மூலம்) மேற்கொள்ளவும், ஒப்பந்த பணிகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையானவை என்பதும், ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்பந்த அறிவிப்புகள் இணையதள வழியாக வழங்கப்பட்டு மற்றும் விலைப்புள்ளிகள் பெறப்படுவதால், குறிப்பிட்ட ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கும் முறை இல்லை என்பதும், கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு (1) கூடலூர் நகராட்சி அறிவிப்பு கடிதங்கள் ந.க.எண். 3102/2025/இ1, நாள் 05.01.2026 (2) அறிவிப்பு கடிதம் ந.க.எண். 276/2026/இ1, நாள் 09.02.2026 (3) அறிவிப்பு கடிதம் ந.க.எண்.1758/2025/இ1, நாள் 05.01.2026 (4) அறிவிப்பு கடிதம் ந.க.எண். 181/2026/இ1, நாள் 02.02.2026 வாயிலாக மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு முறையாகவே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளின் அடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கான ஒப்புநோக்கு பட்டியல் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் சான்றிதழின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பதிவேட்டில் பதியப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்த பணிகளுக்கான அறிவிப்புகள் தமிழ் நாளிதழ்களில் உரிய முறையில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது என்பதும், நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாக பணியின் அவசியம், பொதுமக்களின் நலன் கருதி மூன்று பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய காரணத்தினால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022, பிரிவு 57 (7)-ன் கீழ் அலுவலக விளம்பர பலகையில் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில், குறைவான தொகை வழங்கிய ஒப்பந்தாரருக்கு பணி உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும் பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரால் ஒப்பந்ததாரர்களின் பணிகள் சரிபார்க்கப்பட்டு பட்டியல்கள் முறையாக தயார் செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதும் கூடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம், 1998, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 இவை அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டு வருகிறது என்பதும், விதி மீறல்கள் ஏதும் நடைபெறவில்லை என்பதும் கூடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மேலும், பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் 2026 ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின் போது தேர்தல் பணிக்கான பறக்கும்படை பணியில் பணி அமர்த்தப்பட்டதால், பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதும், தற்போது சான்றிதழ் பெறும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், உரிய சான்றிதழ் பெறப்பட்டதும், ஒப்பந்ததாரர்களுக்கான தொகை உடனடியாக விடுவிக்கப்படும் என்பதும் கூடலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில்

1) மனுதாரர் கூடலூர் அரசு ஒப்பந்ததாரர்கள் அசோசியேஷன் தலைவர் என்ற நிலையில் புகார் அளிக்கப்பட்டு, புகார் மனுமீதான விசாரணையின் போது மனுதாரர் அல்லது மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் எவரும் ஆஜராகாமல் இருந்துள்ளது ஏற்கத்தக்கதல்ல.

2) ஒப்பந்த பணி முடிவுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையை எவ்வித புகார்களுக்கும் இடம் கொடாவண்ணம் உரிய அரசு விதிமுறைகளையும், தணிக்கை தடைகளையும் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொண்டு தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடலூர் நகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

3) கூடலூர் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்ட அவசரக்கால பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதா என்பது குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருப்பூர் மூலம் ஆய்வு மேற்கொண்டு உரிய அறிக்கையினை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. டாக்டர் எல்.ஜு எல்தோ தோமஸ்,
தலைவர், கூடலூர் அரசு ஒப்பந்ததாரர்கள் சங்கம்,
12/226, புதூர்வயல் சாலை, மார்த்தோமா நகர் அஞ்சல்,
கூடலூர், நீலகிரி மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
கூடலூர் நகராட்சி, நீலகிரி மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருப்பூர்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை 600 028.

நகல் – மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்,
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை-600 032

8/8